


அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் தா.பழூர் மேற்கு ஒன்றியம் விக்கிரமங்கலம் கிராமத்தில் ஒன்றிய பொறுப்பாளர் ப.தனவேல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, கழக இளம் பேச்சாளர் தனிமரக்காடு சம்பத்குமார், தலைமைக் கழக பேச்சாளர் இரா.இளஞ்செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், ஒன்றிய மேலிட பொறுப்பாளர் சோ.ப.தர்மராஜ் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில்

# கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பட்டிமன்றம்!

## தலைமை கழக சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் சிறப்புரை! மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஏப். 17-

பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பட்டிமன்றம் நடைபெறுகிறது. இந்த பட்டிமன்றத்தில் தலைமை கழக சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கழகத் துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., உத்தரவிற்கிணங்க, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில், 18.04.2025 (வெள்ளிக்கிழமை), காலை 10.00 மணியளவில்

பெரம்பலூர், எளம்பலூர் சாலையில் உள்ள கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல் தலைமையில், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் இர.இராகவி வரவேற்புரையில்,



மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் தமிழ்.கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ம. தமிழ்வேந்தன், பா. ரினோ பாஸ்டின், அ. இளையராஜா ஆகியோர் முன்னிலையில், நடைபெறும் பட்டிமன்றத்தை, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு பட்டிமன்றத்தை தொடங்கி வைத்து சிறப்புரை யாற்றுகிறார். இதில் கே.என். அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க. சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். பிறந்தநாள் விழா காணும் திராவிட மாடல் முதல்வரின் ஆகாயம் அளாவிய புகழுக்குக் காரணம் முத்தான சாதனைகளா?

வித்தான இலட்சியங்களா? எனும் பட்டிமன்றத்தலைப்பில் தலைமை கழக சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டு நடுவராக இருந்து சிறப்புரை யாற்றுகிறார். இதில் முனைவர். மானசீகன், கவிஞர்.மில்லர் மண்டேலா ஆகியோர் வித்தான இலட்சியங்களே எனும் தலைப்பிலும், பேரா.முனைவர். பு.சி.கணேசன், முனைவர்.இராம.பூதத்தான் ஆகியோர்

முத்தான சாதனைகளை எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா இள, நன்றியுரையாற்றுகிறார். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,இந்நாள் , முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குறித்து பா.ஜ.க. உறுப்பினர் கருத்து! மறுத்து

# அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் விளக்கம்!

**சென்னை, ஏப்.17-**

**சட்டப்பேரவையில் பேசிய பா.ஜ.க. உறுப்பினர் நயினார் நாகேந்திரன், ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குறித்து தெரிவித்த கூற்றை மறுத்து, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாகராஜன் விளக்க மளித்தார்.**

அவர் குறிப்பிட்ட தாவது:

உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்கள் தவறான கணக்கை இங்கே பதிவு செய்திருக்கிறார். அதை நான் திருத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

GSTயில் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் எல்லாம் கிடையாது. சில பொருட்களுக்கு SGST, IGST, சில பொருட்களுக்கு SGST,

## சட்டப்பேரவையில் விவாதம்!



CGST. வெவ்வெறு GST வெவ்வெறு இடத்தில் பொருந்தும்.

100 சதவிகிதம் CGST யில் COLLECT செய்கிற பணம் எல்லாம் நேர்முக வரியோடு கலந்து மொத்த ஒன்றிய அரசாங்கத்தினுடைய நிதிச் சேர்க்கையில் CESS, SUR CHARGE என்று ஒரு 25 சதவிகிதத்தை கழட்டிவிட்டு பாக்கியிருப்பதில் 42 சதவிகிதத்தை மாநிலத்திற்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி, அதில் நான்கு சதவிகிதம் நமக்கு வருகிறதேதவிர, இவர் சொன்ன கணக்கெல்லாம் எந்தக் கணக்கிலும் சேராது.

50 PERCENTல் 29 PERCENT எல்லாம் வருவதே கிடையாது. அது முற்றிலும் தவறான கணக்கு. அந்த கணக்கை சேர்த்துக் கொள்ளக்கூடாது ஒன்று.

இரண்டாவது GST கவுன்சிலில் வாக்களிக்கிற முறையைப் பார்த்தால் அது பேருக்காக உறுப்பினராக இருக்கிறோமே தவிர, 33 சதவிகித ஓட்டு ஒன்றியத்துடனும், பாக்கி 66 சதவிகிதம் 31 மாநிலத்திற்கு ஆளுக்கு இரண்டு சதவிகிதம். அதாவது இன்றைக்குச் சொல்கிறார்கள் மக்கள் தொகை அதிகரித்திருந்தால் கூடுதல் MP இருக்க வேண்டுமென்று, ஆனால், அந்தக் கவுன்சிலில் நீங்கள் ஐந்து பைசாவுக்கு வரி செலுத்தினாலும், 5,000 கோடி செலுத்தினாலும் ஒரே அளவுக்கு ஓட்டுப் போட்டு, ஒரு மாநிலத்திற்கு ஒரு ஓட்டு என்று உலகத்தில் இல்லாத ஒரு முறையைக் கொண்டுவந்தது இந்த GST COUNCIL. அதனால் இதை வைத்து கூட்டாட்சித் தத்துவத்திற்கு சிறந்த உதாரணம் என்று பேசவே கூடாது.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

### சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# குளித்தலை எம்.கந்தசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 17 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-



குளித்தலை சட்டமன்றத் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.கந்தசாமி அவர்கள் 14-04-2025 அன்று மறைந்தார் என்று அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

கந்தசாமி அவர்கள் பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.கழகம் முதன்முதலாக ஆட்சியைப் பிடித்து இந்திய அரசியல் களத்தில் மிகப் பெரும் மாற்றத்துக்கு வித்திட்ட 1967-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத்தேர்தலிலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் எதிர்கொண்டு வரலாறு காணாத வெற்றியைப் பெற்ற 1971-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் குளித்தலை தொகுதியில் வென்ற பெருமைக்குரியவர் ஆவார்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், குளித்தலை தொகுதி கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில்

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்பு!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை!

கிருஷ்ணகிரி, ஏப்.17-

“வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்” என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து அண்ணல் அம்பேத்கரின் 134 வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப் படத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி “சமத்துவ நாள்” உறுதிமொழியை ஏற்றார்.

பின்னர் தாலுக்கா அலுவலகம் மற்றும் செட்டியம்பட்டியில் உள்ள அம்பேத்கர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், குண.வசந்தரசு, ரஜினி செல்வம், எக்கூர் செல்வம் , குமரேசன் பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### திருத்துறைப் பூண்டி நகரக் கழக முன்னாள் செயலாளர்

# வழக்கறிஞர் ஜி.தர்மராஜ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.16-

திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.தர்மராஜன் (வயது 70) அவர்கள் உடல் நல குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்கள் சட்டக் கல்லூரியில் பயின்ற போது கழக மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து கழகப் பணி ஆற்றியவர். திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தினுடைய செயலாளராக இருந்து திறம்பட பணியாற்றியவர்.

மேலும் திருத்துறைப்பூண்டி வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், திருவாரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் அமைப்பாளராகவும், அரசு கூடுதல் வழக்கறிஞராகப் பணியாற்றியவர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களுக்கு கலைச் செல்வி என்கிற மனைவியும் கார்த்திக் ராஜன் என்கிற மகனும் ராஜலட்சுமி என்கிற மகளும் உள்ளனர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களின் இறுதி ஊர்வலம் 17.04.2025 வியாழன் அன்று காலை 11.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி ஆட்டூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

### மண்டல வாரியாக தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

முதலமைச்சர்- கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரியில் நடந்த மாணவர் அணியை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்து, “மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்”;

17.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் முன்னிலையில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா சாலை, “அன்பகத்தில்” சென்னை கிழக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை வடக்கு, சென்னை மேற்கு, சென்னை தெற்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டமும்;

18.04.2025 அன்று காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில், தஞ்சை மத்திய மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயத்தில்” திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், திருவாரூர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்டவாறு நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில், அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டுவர வேண்டும்

அத்துடன், இதுவரை செய்த செயல்திட்டங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புகளை அவசியம்கொண்டுவரவேண்டும். அத்துடன்கல்லூரிகள்கட்டமைப்பின்தகவல்களையும் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**அண்ணா அறிவாலயம்** **இரா. ராஜீவ்காந்தி**
சென்னை18. செயலாளர்,
நாள்: 15.04.2025. தி.மு.க. மாணவர் அணி.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சமத்துவ நாளாக கொண்டாடப்பட்டது மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்,சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அம்பேத்கர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்கப்பட்டது. மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், தழுதாழை சி.பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், செ.ரவிச்சந்திரன், என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ். நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மருத்துவ அணி

# நாகை மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாகை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட டாக்டர் சி.முகுந்தன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, ஏற்கனவே மாவட்ட மருத்துவ அணித் தலைவராக பணியாற்றி வரும் டாக்டர் எஸ்.பால்ராஜ், எம்.பி.பி.எஸ்., டி.டியாப், எஃப் டயாப் (இராமநாயக்கன் குளத் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம்) அவர்கள் நாகை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்** **டாக்டர் எழிலன் நாகநாதன்,**
சென்னை18. செயலாளர்,
நாள்: 15.04.2025. தி.மு.க. மருத்துவ அணி.



கழக தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழிகாட்டுதலின் படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் முன்னிலையில் ”சமத்துவ நாள் உறுதிமொழி” ஏற்று அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் ப.இராணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர். இரா.மாயவன், மாநகராட்சி மேயர் து.கலாநிதி, கிழக்கு நகர செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான செ.பூபதி, மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், ராணா ஆர்.ஆனந்த், வி.கே.பழனிவேல் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.